பக்கங்கள் 17+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 04 திங்கட்கிழமை 16.02.2026 | அதிர்வு 199

## கோப்பாயில் ஒருவர் அடித்துப் படுகொலை

**பாதை விவகாரமே விபரீதமானது**

(ந.லோகதயாளன்)

யாழ். கோப்பாய் பகுதியில் இன்று மாலை இடம்பெற்ற மோதலில் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# கறுப்புக் கொடிப் போராட்டம் பிரிவினைவாதம் அல்ல!

### அது ஜனநாயகத்தின் வெளிப்பாடே என்று அமைச்சர் அபயரத்ன விளக்கம்




இலங்கையின் சுதந்திர தினத்தன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட கறுப்புக் கொடிப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, நாட்டில் பிரிவினைவாதம் மீண்டும் உருவாவதாகக் கூறி மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருவது அரசியல் உள்நோக்கம் கொண்டது என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் மற்றும் அரசுக்கு எதிரான அமைப்புகள் இது தொடர்பில் விடுத்துள்ள கோரிக்கைகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் 02

### வாக்குறுதியை மீறிய அநுர அரசு:

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காது ஏமாற்றுவது துரோகம்!

## மனோ கணேசன் எம்.பி. கடும் தாக்கு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குவதாக வாக்குறுதி அளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு, தற்போது அதற்குப் பதிலாக புதிய ‘பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட’ வரைவைக் கொண்டுவர முயற்சிப்பது பாரிய அரசியல் ஒழுக்க மீறல் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் குற்றம் சாட்டியுள்ளார். 02

# யாழ். கடற்பரப்பில் அத்துமீறிய 25 இந்திய மீனவர்கள் சிக்கினர்



## இரண்டு படகுகளும் பறிமுதல்

யாழ். காங்கேசன்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 25 இந்திய மீனவர்கள் இரண்டு படகுகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு, காங்கேசன்துறை கடற்படையினர் மேற்கொண்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

காங்கேசன்துறைக் கடற்பரப்பை அண்டிய பகுதிக்குள் இரண்டு படகுகளில் அத்துமீறி நுழைந்து 02

## வடக்கு மாகாண பொதுச் சேவையில்

# தொழில்நுட்பப் பதவிகள்: விண்ணப்பங்கள் கோரல்!

வடக்கு மாகாண பொதுச் சேவையில் நிலவும் தொழில்நுட்பவியல் சார்ந்த பதவிகளுக்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.சிறி தெரிவித்துள்ளார்.

கீழ்க்காணும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

*மண் பரிசோதகர் – மாகாண தொழில்நுட்பவியல் சேவை தரம் III அல்லது பயிற்சித் தரம் (அறிவித்தல் இல: R/2026/04)



* ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் – வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவை தரம் III (அறிவித்தல் இல: R/2026/05)

* வேலை மேற்பார்வையாளர் – வடக்கு மாகாண கட்டடங்கள் திணைக்களம் தரம் III (அறிவித்தல் இல: R/2026/06)

மேற்படி பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை மற்றும் விண்ணப்ப விவரங்கள் அடங்கிய முழுமையான விளம்பரத்தை வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் "Exam and Recruitment Advertisement" எனும் பகுதியில் பார்வையிட முடியும்.

தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாகத் தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 2026.03.03 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பயங்கரவாத...

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:–

“தற்போதைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவானது, நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல.

முன்னாள் ஆட்சியாளர்களான மைத்ரி, ரணில், ராஜபக்ஷக்கள் மற்றும் சந்திரிகா ஆகியோரிடமிருந்து தாம் மாறுபட்டவர் என்றும், மக்களின் உண்மையான நண்பன் என்றும் காட்டியே அநுரகுமார ஆட்சிக்கு வந்தார். ஆனால், இன்று அதே அடக்குமுறைச் சட்டங்களை மாற்று உருவில் கொண்டு வருவது, அவருக்கு வாக்களித்த சிங்கள, ஈழத் தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

1978ஆம்ஆண்டுஜே.ஆர்.ஜயவர்தனவினால் தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம், கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம் பலர் தடுத்து வைக்கப்பட்டனர் சித்திரவதைக்குள்ளானார்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். இவற்றை ஜே.வி.பி நன்கு அறியும். சிறைச்சாலைகளில் இன்னும் 12 பேர் நீண்டகாலத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். அவர்களை விடுவிப்பதாக அநுரகுமார உறுதியளித்திருந்தார்.

அரகலய போராட்டத்தின் போது சிங்கள இளைஞர்களும் ஊடகவியலாளர்களும் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட போதே தென்னிலங்கை சமூகம் விழித்துக்கொண்டது. அன்று போராட்டக்களத்தில் நின்று ‘பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்’ என உரக்கக் குரல் கொடுத்தவர்களில் அநுரகுமார திஸாநாயக்க முன்னணியில் இருந்தார்.

அன்று அவர்கள் எழுப்பிய கோஷம் சட்டத்தை ‘இரத்துச் செய்’ என்பதுதானே தவிர, அதற்கு ‘மாற்று’ கொண்டு வருவது அல்ல. தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தவுடன், அரசு இப்போது தனது வாக்குறுதியிலிருந்து பின்வாங்கியுள்ளது.

அரசுக்கு எதிராக ஆயுத வன்முறைகள் முன்னெடுக்கப்படும் போது அதைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் இருப்பதை நாங்கள் ஏற்கின்றோம். ஆனால், ஜனநாயகத்தை ஒடுக்கும் கருவியாக அமையும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம்.” – என்றார்.

### கறுப்புக் கொடி...

தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்:–

“கடந்த 4 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற கறுப்புக் கொடிப் போராட்டங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் நிலவும் கருத்துச் சுதந்திரத்தின் அங்கமே தவிர, அவை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது பிரிவினைவாதத்தின் மீள் எழுச்சியாகவோ கருதப்பட வேண்டியதில்லை. இத்தகைய போராட்டங்களை மிகைப்படுத்தி அரசியலாக்குவது தேவையற்ற செயலாகும்.

மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவது அரசின் நோக்கமல்ல. எனினும், தேர்தலை நடத்துவதற்குத் தேவையான எல்லை நிர்ணயப் பிரச்சினைகள், சட்ட ரீதியான சிக்கல்கள் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவற்றைச் சீர்செய்வதில் அரசு தற்போது தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. முறையான சீர்திருத்தங்கள் இன்றி தேர்தலை நடத்துவது மேலதிகக் குழப்பங்களையே ஏற்படுத்தும்.

எதிர்க்கட்சிகளும் அரசுக்கு எதிரான அமைப்புகளும் மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தை உருவாக்கி, அதன் மூலம் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றன. பிரிவினைவாதத்தைக் காரணமாகக் காட்டித் தேர்தல் கோருவது ஆரோக்கியமான அரசியல் கலாசாரம் அல்ல. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசு எப்போதும் விழிப்புடன் உள்ளது.” – என்றார்.

### யாழ். கடற்பரப்பில்...

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே, படகோட்டிகள் உள்ளிட்ட 25 மீனவர்களும் பிடிபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது படகுகளையும் கரைக்குக் கொண்டு வந்த கடற்படையினர், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.


### கோப்பாயில்...

கோப்பாய் ஆசிரிய கலாசாலை வீதியில் வசிக்கும் 56 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

போக்குவரத்துப் பாதை தொடர்பாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம், பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது. இதன்போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மேற்படி நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.




# பதற்றமின்றி பரீட்சையை எழுதுங்கள்! புதிய மாற்றத்தை ஏற்படுத்துங்கள்!!

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் வட மாகாண மாணவர்களுக்கு ஆளுநர் வாழ்த்து




"ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் எமது அன்பு மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த காலப் பின்னடைவுகளைத் தகர்த்தெறிந்து, இம்முறை வடக்கு மாகாணத்தின் கல்வி வரலாற்றில் நீங்கள் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்துவீர்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

"எமது மாகாணம் கடந்த சில ஆண்டுகளாகப் பரீட்சைப் பெறுபேறுகளில் பின்தங்கிய நிலையில் காணப்பட்டாலும், அதனை மாற்றி அமைக்கும் வல்லமை உங்கள் ஒவ்வொருவரிடமும் உள்ளது.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கென, குறிப்பாக மேலதிக கற்றல் தேவைப்பட்ட மாணவர்களுக்காக எனது நேரடி மேற்பார்வையில் விசேட இணையவழி கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்த முயற்சிகளும், உங்களின் கடின உழைப்பும் நிச்சயம் வீண் போகாது.

எந்த இடத்தைத பெறுகிறோம் என்பது ஒரு புள்ளிவிவரம் மட்டுமே. ஆனால், எமது மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறுகளுடன் சித்தியடைந்து, உயர்தரக் கல்விக்குத் தகுதி பெற வேண்டும் என்பதே எனது முதன்மையான எதிர்பார்ப்பாகும்.

எனவே, எவ்வித பதற்றமும் இன்றி, முழுமையான தன்னம்பிக்கையுடனும், தெளிந்த மனதுடனும் பரீட்சையை எதிர்கொள்ளுங்கள். நீங்கள் படித்தவற்றைத் தெளிவாகவும், நிதானமாகவும் விடைத்தாளில் பதிவு செய்யுங்கள்.

உங்களின் வெற்றி, உங்களின் குடும்பத்துக்கு மட்டுமல்ல, முழு வடக்கு மாகாணத்துக்கும் பெருமை சேர்க்கும். உங்களின் எதிர்காலக் கனவுகள் மெய்ப்பட இறைவனைப் பிரார்த்திப்பதோடு, மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் எனது வெற்றிக்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்." – என்றுள்ளது.

வடக்கு மாகாணத்திலிருந்து பாடசாலை பரீட்சார்த்திகளாக 20 ஆயிரத்து 887 பேரும், தனியார் பரீட்சார்த்திகளாக 5 ஆயிரத்து 412 பேருமாக 26 ஆயிரத்து 299 பேர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களுக்காக 248 பரீட்சை நிலையங்கள் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

# அரசின் புதிய சட்டமூலம் அடக்குமுறையின் உச்சம்

## காரைதீவு தவிசாளர் காட்டம்





(வி.ரி.சகாதேவராஜா)

அரசு முன்வைக்க முயற்சிக்கும் புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஜனநாயக அடிப்படைகளையே பாதிக்கும் அபாயம் கொண்டது எனக் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் சு. பாஸ்கரன் கடுமையாக எச்சரித்தார்.

காரைதீவு பிரதேச சபையின் எட்டாவது அமர்வு இன்று திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு என்ற பெயரில் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தும் எந்தச் சட்டத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

புதிய சட்டம் நாட்டில் ஜனநாயக உரிமைகள் குறையும் சூழலை உருவாக்கக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சட்டம் கொண்டு வரப்படுமாயின் அது அரசியல் கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கும், குடிமக்களின் உரிமைகளுக்கும் நேரடி அச்சுறுத்தலாக அமையும் என்பதோடு சமூக செயற்பாட்டாளர்கள் மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சட்டம் தொடர்பாக மக்கள் கருத்து கேட்காமல் அவசரமாக முடிவெடுப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும், விரிவான பொதுக் கலந்துரையாடல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

“ஏலவே கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் ஏற்பட்ட பாதிப்பு எத்தகைய பாரிய சவால்களை ஏற்படுத்தியது என்பதை நாம் மறக்க முடியாது. அப்படி இருக்கையில் புதிய சட்டம் மோசமாக இருக்கின்றது. மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் ஒன்றுபட்ட நிலைப்பாடு அவசியம்.” - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படவுள்ளமை சமுதாயத்தின் சகல மட்டங்களிலும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

# செம்பியன்பற்று வடக்கில் நேற்று கரைவலை வாடி தீயிட்டு அழிப்பு!

## மர்ம நபர்களுக்கு வலைவீச்சு

(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ். வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கு பகுதியில் நேற்று இரவு கரைவலை வாடி ஒன்று தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

செம்பியன்பற்று வடக்கு பகுதியில் அல்பிரட் என்பவருக்குச் சொந்தமான கரைவலை வாடியே இனந்தெரியாத நபர்களால் இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான கரைவலைத் தொழில் நடவடிக்கைகளுக்காக மீனவர்கள் ஆயத்தமாகி வந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. எனினும், தீ வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வாடிக்குள் மீன்பிடி உபகரணங்கள் எவையும் வைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் பெரும் சொத்துச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.



இதேவேளை, கடந்த ஆண்டும் செம்பியன்பற்று வடக்கு பகுதியில் மீனவர் ஒருவரின் கரைவலை வாடி மர்ம நபர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிதற்றல் கருத்து

முன்னாள் இராணுவத் தளபதி ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த இராணுவத்தின் தளபதியென்று பேர் சொல்லிக் கொள்பவர். இலங்கை இராணுவத்தில் ஃபீல்ட் மார்ஷல் என்ற பட்டத்தை பெற்ற ஒரே ஓர் இராணுவ அதிகாரி.

இராணுவ சேவையின் பின்னர் அரசியலில் இறங்கினார் என்றாலும், பல சமயங்களில் சொதப்பல் பேச்சுக்களை அல்லது கருத்துகளை முன்வைத்து சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்பவர் என்று பெயரெடுத்தவர்.

இப்போதும் அப்படி ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்.

இப்போது நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களினால் தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. முழு இராணுவமும் கொழும்புக்கு அனுப்பப்பட்டாலும் மோட்டார் சைக்கிளில் வந்து ஒருவரை ஒருவர் சுட்டுக் கொல்கின்றமையை தடுக்க எந்த வழியும் இல்லை என்றெல்லாம் அவர் தத்துவம் பேசியிருக்கிறார்.

அவர் கூறிய விடயங்கள் ஒரு புறத்தில் சரியானவை என்றாலும் மறுபுறத்தில் முட்டாள்தனமானவை.

ஆங்காங்கே நடைபெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்பட்டு விட மாட்டாது என்பது தெரிந்ததுதான். ஆனால் அமைதியான சமூக வாழ்வு முழுமையாகக் குழம்பிப் போய் விடும். தடி எடுத்தவன் தண்டல்காரன் என்ற அராஜக நிலை ஆழ வேரூன்றும்.

அது மட்டுமல்ல, புலிகள் மீதான யுத்த வெற்றி, அதனால் கிடைத்த அமைதி, சமாதானம் என்றெல்லாம் பீற்றிக் கொண்டு கொண்டாடும் சிங்களத்துக்கு இந்த பாதாள உலக கும்பல்களின் அட்டகாசமே பெரும் நாசமாக வந்துவிடும். பொருளாதார பாதிப்பு மாத்திரமல்லாமல் சமூகச் சீரழிவை நோக்கியும் நாடு நகர்ந்து கொண்டிருப்பதை அது உறுதிப்படுத்தும். சமூக சீரழிவினதும், பொருளாதாரப் பாதிப்பினதும் இறுதி விளைவு தேசிய பாதுகாப்புக்கு குந்தகமாவதுதான் என்பதை முன்னாள் இராணுவத் தளபதி புரியாமல் இருக்கிறார்.

முழு இராணுவத்தையும் கொழும்புக்கு அனுப்பினாலும் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொள்வதை நிறுத்த முடியாது என்பது உண்மைதான். ஆனால் முழு அளவில் படைத் தரப்பை பாதாள உலகக் கும்பல்களுக்கு எதிராகத் திருப்பி விட்டு, அவற்றை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் இப்படி கண் மூடித் தனமாக ஒருவரை ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்து சுட்டு விட்டு தப்பி செல்கின்ற சகாப்தமும் முடிவுக்கு வந்துவிடும். அது புரியாதவர் போல பேசுகின்றார் சரத் பொன்சேகா.

இருக்கின்ற ஆட்சியாளர்களைத் தாஜா செய்து சமாளிக்க வேண்டும் என்ற கருத்தில், ஏதேதோ புரட்டிப் பேசி, தம்மை பெரிய இராணுவத் தத்துவ ஞானி போல கருத்துக்களை முன்வைக்க முனைகிறார் முன்னாள் இராணுவத் தளபதி.

அது மாத்திரமல்ல, இந்தப் பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியபடி நாட்டில் போதைப் பொருள் சாம்ராஜ்யமும், பாதாள உலகக் கும்பல்களின் அட்டகாசமும் உச்சமாக இருக்க, அவற்றுக்கு எதிராக முழுப் படைப் பலத்தையும் திருப்பிவிடாமல், அந்தப் படைப் பலத்தை அமைதியான தமிழர் தாயகத்தின் மீதான ஆக்கிரமிப்புக்காகத் தொடர்ந்து பேணுகின்ற தென்னிலங்கை ஆட்சியாளர்களின் போக்கை தமது இந்தக் கருத்து வெளிப்பாட்டின் மூலம் நியாயப்படுத்த முயல்கின்றார் முன்னாள் இராணுவ தளபதி.

இது அரசியல் ரீதியாக மட்டுமல்ல, பாதுகாப்புத் துறை ரீதியிலும் பிதற்றல் கருத்தாகவே கொள்ளப்பட வேண்டும்.





# ஊழலற்ற, போதைப்பொருள் அற்ற தேசத்தை உருவாக்க தகுதியான அரச சேவை அவசியம்!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து







“டிஜிட்டல் மயமாக்கல், போதைப் பொருள் அற்ற தேசத்தை உருவாக்குதல் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் அரசு கொண்டுள்ள வலுவான அர்ப்பணிப்புக்கு உயர் திறனும் தகுதியும் கொண்ட அரச சேவை அவசியமாகும். இத்தகைய தேசிய முன்னுரிமைகளைத் திறம்பட ஆதரிப்பதற்குத் தேவையான அறிவு, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் நெறிமுறைத் தரங்களுடன் எமது அதிகாரிகளைத் தயார்படுத்துவதில் ஐடெக் புலமைப்பரிசில் செயற்றிட்டம் முக்கிய பங்கு வகிக்கின்றது.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தினம், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆளுநர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

“இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு செயற்றிட்டமானது, வடக்கு மாகாணத்தின் மனித வள மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2024ஆம் ஆண்டில் 40 அதிகாரிகளும், 2025ஆம் ஆண்டில் 45 அதிகாரிகளும் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இந்த ஆண்டில் இதுவரை 3 அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த அதிகரிப்பானது, இப்புகழ்மிக்க செயற்றிட்டத்தின் மீது எமது அதிகாரிகள் கொண்டுள்ள நம்பிக்கையைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

இந்தியாவில் பெறப்பட்ட பயிற்சியின் அனுபவமானது, எமது அதிகாரிகளின் பார்வையை விரிவுபடுத்தியுள்ளது. அவர்கள் புதிய நம்பிக்கை, உலகளாவிய பார்வை மற்றும் பொதுச் சேவையில் சிறந்து விளங்கும் உறுதியுடன் நாடு திரும்புகின்றனர். வடக்கு மாகாணம் போன்ற சவால்களை எதிர்கொண்ட ஒரு பிராந்தியத்தின் நிலையான அபிவிருத்திக்கு இத்தகைய திறமையான அதிகாரிகள் மிக அவசியம்.

எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, கணக்கியல் மற்றும் வரிவிதிப்பு போன்ற வளர்ந்து வரும் துறைகளில் மேலதிக வாய்ப்புகள் வழங்கப்படும் என நம்புகின்றோம்.

தற்போதைய அரசின் பிரதான கொள்கைத் தூண்களான பொருளாதார உறுதிப்படுத்தல், தேசிய பாதுகாப்பு, நல்லாட்சி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை அடைவதற்கு, ஐடெக் போன்ற திட்டங்கள் எமது அதிகாரிகளைத் தயார்படுத்துகின்றன.” – என்றார்.

மனித வள மேம்பாட்டில் இந்தியா வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுக்கும் ஆளுநர் தனது ஆழமான நன்றிகளையும் இதன்போது பதிவு செய்தார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய்முரளி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீவன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஐடெக் திட்டத்தின் ஊடாகப் பயிற்சிகளைப் பெற்ற முன்னாள் மற்றும் இந்நாள் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பொலிஸார் அதிரடிச் சோதனை: ஒரே நாளில் 853 பேர் கைது

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 853 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 31,525 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். 20 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 429 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய203பேரும்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 527 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 96 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,560 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கொழும்பு - புத்தளம் ரயில் சேவைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகின




கொழும்பு – புத்தளம் ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் இன்று திங்கள் கிழமை காலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மார்க்கம் இன்றையதினம் முழுமையாக திறக்கப்படும் எனவும், கொழும்பு கோட்டையிலிருந்து புத்தளம் வரையிலான ரயில்கள் இயக்கப்படும் எனவும் ரயில் திணைக்களம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

டித்வா சூறாவளியால் சேதமடைந்த புத்தளம் ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

பின்னர் சேவைகள் பல கட்டங்களாக நீர்கொழும்பு, கொச்சிக்கடை, நாத்தாண்டியா மற்றும் குடாவ ரயில் நிலையங்கள் வரை நீடிக்கப்பட்டன. டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி, சிலாபம் ரயில் நிலையம் வரை சேவைகள் நீடிக்கப்பட்டன.

சிலாபம் மற்றும் புத்தளம் நிலையங்களுக்கு இடையிலான பத்துலு ஓயா பாலத்திற்கு அருகில் ரயில் பாதை அடித்துச் செல்லப்பட்டதாலும், தில்லையடி துணை நிலையத்திற்கு அருகில் தண்டவாளத்தில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் மனுவங்கம துணை நிலையத்திற்கு அருகில் உள்ள தெதுரு ஓயாவில் தண்டவாளத்தின் பல பகுதிகள் அடித்துச் செல்லப்பட்டதாலும் புத்தளம் ரயில் நிலையத்தின் ரயில் சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், இன்றையதினம் அதிகாலை 4:30 மணிக்கு புத்தளத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கு பயணிக்க வேண்டிய அலுவலக ரயில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பயணிகள் இன்றி பயணித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இன்றையதினம் அதிகாலை 4:00 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்ட ரயில், சூறாவளிக்குப் பின்னர் கொழும்பிலிருந்து புத்தளம் வரை இயக்கப்பட்ட முதல் ரயில் ஆகும்.







# நாமலின் கிரிஷ் ஒப்பந்த வழக்கு: 19ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கிரிஷ் ஒப்பந்தம் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை, எதிர்வரும் 19ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை நீதிமன்ற கடமைகளில் இருந்து விலகுவதாக சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளமையால், மேற்படி வழக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பிரதிவாதியான நாமல் ராஜபக் ஷ நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, மேற்படி வழக்கு 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ரக்பியை ஊக்குவிப்பதாகக் கூறி, இந்திய கிரிஷ் நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ரூபாவை பெற்று, முறைக்கேடாக பயன்படுத்தினார் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷவுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கிளிநொச்சியின் நீர் விநியோகத் திட்டத்தை விரிவுபடுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

## நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்ஹ தெரிவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்களின் தேவைகளின் அடிப்படையில் குழாய் வழி நீர் விநியோக நடவடிக்கைகளை விரிவுப்படுத்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் என வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சராக வைத்திய கலாநிதி சுசில் ரணசிங்ஹ தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் நீர் விநியோக நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலின் போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கிளிநொச்சி மாவட்டத்தின் எதிர்கால பொருளாதார நலன்கருதி குறிப்பாக பரந்தன் பகுதியில் அமைக்கப்படவுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வயத்தின் தேவை கருதியும், பொது மக்களுக்கான குடி நீர் தேவை அதிகரித்துச் செல்லும் நிலைமையினையும் ஆதாவது முக்கியமாக கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் அதிகரித்து வரும் சிறுநீரக பாதிப்புக்களை கருத்தில் எடுத்தும் கிளிநொச்சி மாவட்ட நீர் விநியோகத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.” எனத் தெரிவித்தார்.

இதன் மூலம் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், கிராமங்களுக்கான குழாய்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளப்பட்டு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு சுத்தமான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படும். அத்தோடு முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கும் நீர் விநியோகம் வழங்கப்பட்டு மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி சமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# திஸ்ஸ விதாரணவின் உடலுக்கு ஜனாதிபதி அநுரகுமார அஞ்சலி



மறைந்த லங்கா சம சமாஜ கட்சியின் தலைவரும் முன்னாள் சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் உடலுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இறுதி அஞ்சலி செலுத்தினார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் என்.எம். பெரேரா நிலையத்திற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சென்ற ஜனாதிபதி, பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.



# மலையகத்தில் சில பகுதிகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கை

நாட்டில் நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா – வலப்பனை மற்றும் நில்தண்டாஹின்ன பகுதிக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாத்தளை – வில்கமுவ பகுதிக்கு முதலாம் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலத்தில் வெடிப்புகள் தோன்றுதல், மரங்கள் அல்லது மின் கம்பங்கள் சாய்வடைதல் மற்றும் நீரூற்றுகள் திடீரெனத் தோன்றுதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அங்கிருந்து உடனடியாக வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மண்சரிவு தொடர்பான ஏதேனும் அவசர அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தையோ அல்லது அந்தந்தப் பகுதி கிராம உத்தியோகத்தரையோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




# கல்முனை நீதிமன்ற வளாகம் முன்பாக சட்டத்தரணிகள் கண்டன ஆர்ப்பாட்டம்

(நூருல் ஹுதா உமர்)

அக்குரெகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்ட துயரச்சம்பவத்தை கண்டித்து இன்று காலை கல்முனை நீதிமன்ற வளாகம் முன்பாக அமைதியான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கல்முனை கிளை இதனை ஏற்பாடு செய்திருந்தது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு கல்முனை நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்ற பின்னர் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் கருப்பு பட்டா அணிந்த சட்டத்தரணிகள், “சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்படுக”, “சட்டத்தரணிகளுக்கு பாதுகாப்பு வழங்குக” உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும், அதனை பிரதிபலிக்கும் பதாகைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.












# திருமலை நீதிமன்றத்திற்கு முன்பாக வழக்கறிஞர்கள் பணிப் பாகிஷ்கரிப்பு

**(அபு அலா)**



சட்டத்தரணி மற்றும் அவரது மனைவி படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு தழுவிய ரீதியில் இன்று திங்கள் கிழமை முன்னெடுக்கப்பட்டுவரும் நீதிமன்ற நடவடிக்கைகளை புறக் கணிப்பதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் திருகோணமலையிலும் வழக்கறிஞர்கள் புறக்கணிப்பில் ஈடு பட்டிருந்தனர்.

இதற்கமைய, திருகோணமலை நீதிமன்றத்திற்கு முன்பாக கறுப்புக் கொடி கட்டி வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட சமூகத்தினர் அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பங்கேற்ற சட்டத்தரணிகள் கருத்து தெரிவிக்கையில்,

“சட்டத்தரணி மீது நடத்தப்படும் தாக் குதல், முழு நீதித்துறையின்மீதும் நடத்தப்படும் தாக்குதலாகும். சட்டத் தின் ஆட்சியை நிலைநிறுத்துவது அரசின் பொறுப்பாகும். குறிப்பாக குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற் கான துரிதமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைகள் எடுக்கப்பட வேண்டும்.”– என்று குறிப்பிட்டனர்.

# சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலை உட்படுத்தல் விளையாட்டு நிகழ்வுகள்





**(த.சுபேசன்)**

ஜெசாக் நிறுவனத்தின் பங்களிப் புடன் அண்மையில் சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலையின் விசேட அலகு மாணவர்களுக்கான உட்படுத்தல் விளையாட்டு நிகழ்வுகள் முன்னெடுக் கப்பட்டிருந்தன.

பாடசாலையின் செயற்பட்டு மகிழ் வோம் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற் றிருந்த வேளையிலேயே. அதன் ஓர் அங்கமாக மேற்படி செயற்திட்டம் முன்னெ டுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தில் சிறப்பாக இடம்பெற்ற மகா சிவராத்திரி நிகழ்வுகள்

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தில் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹறாஜ் தலைமையில் மகா சிவராத்திரி நிகழ்வுகள் நேற்று இரவு இடம்பெற்றன.

**படங்கள்: வி.ரி. சகாதேவராஜா**









# வென்றது ஆப்கான்



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில், ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு எதிரான ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கை மற்றும் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரின் 28ஆவது போட்டி டில்லியில் இன்று மதியம் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் 'டி' பிரிவில் உள்ள ஆப் கானிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சிய அணிகள் மோதின.

ஆப்கானிஸ்தான் 2 போட்டிகளில் தோற்று இருந் தது. ஐக்கிய அரபு இராச்சியம் ஓர் ஆட்டத்தில் வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் தோற்றிருந்தது.

இன்றைய போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சியம் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 160 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணியின் சோயிப்கான் அதிகபட்சமாக 48 பந்துகளில் 68 ஓட்டங்களும் (6 பௌண்டரிகள், 4 சிக்ஸர்கள்), ஷரபு 31 பந்துகளில் 40 ஓட்டங்களும் (3 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள்) சேர்த்தனர்.

ஆப்கானிஸ்தான் தரப்பில் அஸ்மதுல்லா உமர்சாய் 4 விக்கெட்டுகளையும், முஜிபுர் ரகுமான் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 161 ஓட்டங்கள் என்ற இலக்கு நோக்கிக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணிக்கு ஆரம் பத்தில் அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க வீரரான ரஹ்மனுல்லா குர்பாஸ் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். இவருடன் களமிறங்கிய இப்ரா கிம் சத்ரான் அதிரடியாக ஆடினார். இவர் 41 பந்து களில் 53 ஓட்டங்கள் (6 பௌண்டரிகள், ஒரு சிக் ஸர்) விளாசினார்.

அடுத்துக் களமிறங்கிய குலாப்தீன் நயிப் 12 பந்துகளில் 13 ஓட்டங்களுடனும், செதிகுல்லா 14 பந்துகளில் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து ஆடிய தார்விஷ் ரசூலி 23 பந்துகளில் 33 ஓட்டங்கள் (3 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர்) அடித்தார். இவருடன் ஆடிய அச மதுல்லா ஓமர்சாய் 21 பந்துகளில் 40 ஓட்டங்களை (2 பௌண்டரிகள், 3 சிக்ஸர்கள்) விளாசினார்.

இதன் மூலம் ஆப்கானிஸ்தான் அணி 19.2 ஓவர் களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 162 ஓட்டங்களைச் சேர்த்தது. இதனால் ஆப்கானிஸ்தான் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக அசமதுல்லா ஓமர்சாய் தெரிவானார்.



## ‘அருவருப்பான கருத்து’:

# நயினார் நாகேந்திரனுக்கு நடிகை த்ரிஷா கண்டனம்





தன் மீதான தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனின் கருத்துக்கு, நடிகை த்ரிஷா வழக்கறிஞர் மூலமாக கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.

இதுகுறித்து நடிகை த்ரிஷாவின் வழக்கறிஞர் நித்யேஷ் நடராஜ் வெளியிட்ட அறிக்கையில்,

"எனது கட்சிக்காரரும், திரைப்பட நடிகையுமான த்ரிஷா கிருஷ்ணனின் அறிவுறுத்தலின் பேரில், பின்வருவன வற்றைப் பதிவு செய்ய இந்த அறிக்கையை வெளியிடுகிறேன்:

1. எனது கட்சிக்காரரைப் பற்றி ஊடகங்களில் பரவி வரும் அருவருப்பான கருத்து குறித்து இந்த அறிக்கையை வெளியிடப்படுகிறது.

2. மாநில அரசியலில் உயர் பதவியில் இருக்கும் ஒருவர் இத்தகைய அருவருப்பான மற்றும் பொருத்தமற்ற கருத்தை வெளியிடுவார் என்று எனது கட்சிக்காரர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

3. எனது கட்சிக்காரர் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்திருக்கவில்லை என்பதையும், அவ்வாறு இருக்கவும் விரும்பவில்லை என்பதையும் மிகத் தெளிவாகக் கூறுகிறார். மேலும், எனது கட்சிக்காரர் கடந்த காலங்களில் இருந்தது போலவே, அரசியலில் எப்போதும் நடுநிலையான நிலைப்பாட்டையே எடுத்துள்ளார்.

4. எனது கட்சிக்காரர் எந்தவொரு அரசியல் செயல்பாட்டிலும் ஈடுபடாமல், தனது தொழிலில் மட்டுமே கவனம் செலுத்த விரும்புகிறார். மிக முக்கியமாக, ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையை ஒருபோதும் பொது விமர்சனம் அல்லது விவாதப் பொருளாக மாற்றக்கூடாது என்பது பொதுவான நிலைப்பாடு. மேலும், உயர் பதவிகளை வகிக்கும் நபர்கள் பொது விவாதத்தில் பொறுப்பையும், சமநிலையையும் பராமரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. எனது கட்சிக்காரரின் பெயரை அவருடன் தொடர்பற்ற விஷயங்களில் இணைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது." என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சில நாள்களுக்கு முன்பு விஜய் - த்ரிஷா குறித்து பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியமை பெரும் சலசலப்பை உருவாக்கியுள்ளது.

# சட்டவிரோதக் குடியேறிகளாக இலங்கை தமிழரை கருதக் கூடாது

## பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



"இந்தியாவில் 40 ஆண்டுகளுக்கு மேலாக வசித்துவரும் இலங்கைத் தமிழர்களை சட்டவிரோத குடியேறிகளாக கருதக்கூடாது. இதை மத்திய அரசு அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும்."

- இவ்வாறு பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில் முதல்வர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த 1983 ஆம் ஆண்டு முதல், இலங்கையில் ஏற்பட்ட இனமோதல்களால் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள சொந்த மண்ணில் இருந்து வெளியேறிய இலங்கைத் தமிழர்களுக்கு தங்குமிடம், வாழ்வாதார உதவி, கல்வி, மருத்துவ வசதிகளை தமிழகம் தொடர்ந்து வழங்கி வருகிறது.

தமிழகத்தில் தற்போது 89 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் வசிக்கின்றனர். இவர்களில் கணிசமானோர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் வசிப்பவர்கள். அதிலும் 40 சதவீதத்தினர் இந்திய மண்ணிலேயே பிறந்தவர்கள். ஆனால், அவர்களுக்கு குடியுரிமை அல்லது நீண்டகால விசா போன்ற நிலையான சட்டப்பூர்வமான தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை.

‘ஆக்கப்பூர்வ அணுகுமுறை’ - இந்த நிலையில், சமீபத்திய மத்திய அரசின் கொள்கை முன்னேற்றங்கள், குறிப்பாககுடிவரவு மற்றும் வெளிநாட்டினர் ஆணை 2025 ஆக்கப்பூர்வமான மற்றும் மனிதாபிமான நோக்கத்துடன் கூடிய அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றன. அந்த ஆணைப்படி, ‘2015 ஜனவரி 9 ஆம் திகதி வரை இந்தியாவில் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்களை சட்ட விரோதமாககுடியேறியவர்களாக கருதக்கூடாது’ என்று முறையான விளக்கம் மத்திய அரசால் வழங்கப்பட வேண்டும்.

எனவே, இலங்கைத் தமிழர்களிடன் குடியுரிமை விண்ணப்பங்களை பரிசீலிக்க தடையாக உள்ள முந்தைய நிர்வாக உத்தரவை மத்திய அரசு ரத்து செய்து, தமிழக அரசால் வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் நீண்டகால விசா விண்ணப்பங்களுக்கு தற்போதைய நடைமுறையில் கடவுச்சீட்டு மற்றும் விசா தேவைகளை தள்ளுபடி செய்யும் நிர்வாக விளக்கத்தை வழங்க வேண்டும். குடியுரிமை, நீண்டகால விசா விண்ணப்பங்களை விரைவாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர், பொலிஸ் கண்காணிப்பாளர்களுக்கு அதிகாரம்வழங்க வேண்டும்.

இந்தியாவில் 40 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களின் நிலையை சட்டவிரோதம் என வரையறுப்பது மனிதாபிமான சூழலை பிரதிபலிக்கவில்லை. குறிப்பாக, 2015 ஜனவரி 9 வரை இந்தியாவில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களை சட்டவிரோதமாக குடியேறியவர்களாக கருதக் கூடாது என்ற விளக்கத்தை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவேண்டும். இந்த கருத்துகளை விரைவாக, மனிதாபிமான அடிப்படையில் பரிசீலித்து நல்ல முடிவை எடுப்பீர்கள் என நம்புகிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முயன்ற உக்ரைன் முன்னாள் எரிசக்தி அமைச்சர் கைது



உக்ரைனில் முன்னாள் எரிசக்தி அமைச்சர் ஒருவர் நாட்டை விட்டு வெளியேற முயன்றபோது கைது செய்யப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஊழல் முறைப்பாட்டில் சிக்கிய அதிகாரிகளில் ஒருவராக இருந்ததால் கடந்த ஆண்டு அரசாங்கப் பணியில் இருந்து நீக்கப்பட்ட ஜெர்மன் கலுஷ் செங்கோ, உக்ரைனில் இருந்து புறப்படும் ரயிலில் கைது செய்யப்பட்டுள்ளார் என கூறப்படுகிறது.

அவர் எங்கு பயணிக்க விரும்பினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

நவம்பரில் நடந்ததாகக் கூறப்படும் 100 மில்லியன் டொலர் மோசடித் திட்டத்தில் தொடர்புடைய பல அரசாங்க நபர்களில் இவரும் ஒருவர்.

ஊழலை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்து ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பிற்கு முன்பே ஆட்சிக்கு வந்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியின் நிர்வாகத்தை இந்த ஊழல் சூழ்ந்துவிடும் என்று அச்சுறுத்தியது.

போர் முழுவதும் ஜெலென்ஸ்கியின் நெருங்கிய ஆலோசகரான அவரது தலைமைப் பணியாளர் ஆண்ட்ரி யெர்மக், அவரது வீடு சோதனை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இராஜினாமா செய்தார்.

ஜனாதிபதி அல்லது யெர்மக் மீது எந்தத் தவறும் செய்தனர் என குற்றம் சாட்டப்படவில்லை.

எனினும், இந்த ஊழல், உக்ரைனின் அரசமைப்பில் உள்ள விதிகள் காரணமாக 2022 இல் போர் தொடங்கியதிலிருந்து இடைநிறுத்தப்பட்ட தேர்தல்களை நடத்த அமெரிக்காவிடமிருந்து அழுத்தத்தை அதிகரித்துள்ளது.

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் விஷம் கொடுத்துக் கொலை

## ஐரோப்பிய நாடுகள் வெளியிட்ட ஆதாரங்கள்



ரஷ்யாவின் மிக முக்கியமான எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய அலெக்ஸி நவால்னி , இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சிறையில் உயிரிழந்தமைக்கு 'தவளை விஷமே' காரணம் என பிரித்தானியா உள்ளிட்ட 05 ஐரோப்பிய நாடுகள் அதிரடி ஆதாரங்களை வெளியிட்டுள்ளன.

மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய பிரிட்டன் வெளிவிவகார செயலர் யவெட் கூப்பர், நவால்னியின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளை ஆய்வு செய்ததில் 'எபிபாடிடைன்' எனப்படும் மிக அரிதான நரம்பு விஷம் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த நச்சு தென்னமெரிக்காவின் காடுகளில் வாழும் ஒரு வகை விஷத் தவளைகளில் இருந்து எடுக்கப்படுபவை.இது மார்ஃபினை விட 200 மடங்கு அதிக வீரியம் கொண்டது. இது உடலில் சென்றால் தசைப் பிடிப்பு, பக்கவாதம், சுவாச செயலிழப்பு ஏற்பட்டு மிக விரைவாக மரணம் நிகழும்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்வீடன் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இந்த அரிதான நச்சுத்தன்மை கொண்ட விஷம் ரஷ்யாவின் இயற்கையில் எங்கும் காணப்படுவதில்லை. நவால்னி சிறையில் இருந்தபோது அவருக்கு இந்த விஷத்தைச் செலுத்த ரஷ்ய அரசுக்கு மட்டுமே வாய்ப்பும், நோக்கமும் இருந்தது. எனவே அவரது மரணத்திற்கு கிரெம்ளின் மாளிகையே முழுப் பொறுப்பு." என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

தமது கணவர் கொல்லப்பட்டதற்கான அறிவியல் பூர்வ ஆதாரம் கிடைத்துள்ளமை தொடர்பில் அலெக்ஸி நவால்னியின் மனைவி யூலியா,

"முதல் நாளிலிருந்தே என் கணவர் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார் என்பதில் நான் உறுதியாக இருந்தேன். தற்போது அதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. புட்டின் ஒரு கொலைகாரர், அவர் இதற்காகப் பதில் சொல்லியே ஆகவேண்டும்." எனத் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை ரஷ்யா வழக்கம் போல மறுத்துள்ளது. இது மேற்கத்திய நாடுகளின் திட்டமிடப்பட்ட 'தகவல் யுத்தம்' எனவும், தங்கள் நாட்டுப் பிரச்சினைகளில் இருந்து திசைதிருப்பவே இத்தகைய பொய்களைப் பரப்புவதாகவும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சு குற்றம்சாட்டியுள்ளது.



# இஸ்ரேலிய தாக்குதல்களில் காஸாவில் 11 பேர் மரணம்

காசாவில் ஞாயிற்றுக் கிழமை காலை இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என பாலஸ்தீன சிவில் பாதுகாப்பு மற்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு காசாவில் ஒரு கூடார முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 06 பேர் கொல்லப்பட்டனர் எனவும் அதே நேரத்தில் அந்தப் பகுதியின் தெற்கில் நடந்த மற்றொரு தாக்குதலில் 05 பேர் கொல்லப்பட்டனர் என்றும் பாலஸ்தீனிய செம்பிறை அமைப்பு தெரிவித்துள்ளது.

ஹமாஸின் போர்நிறுத்த மீறல்களுக்கு பதிலளிக்கும் விதமாக பயங்கரவாத இலக்குகளைத் தாக்கியதாகவும், இஸ்ரேலிய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் ஒரு சுரங்கப்பாதையில் இருந்து வெளிவந்த பின்னர் போராளிகள் கொல்லப்பட்டனர் என்றும் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெரிவித்தன.

ஒக்டோபர் 10 ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததிலிருந்து இஸ்ரேலும் ஹமாஸும் கிட்டத்தட்ட தினசரி மீறல்களுக்கு ஒரு வரையொருவர் குற்றம் சாட்டி வருகின்றன.

ஹமாஸ் நடத்தும் காசா சுகாதார அமைச்சகம், போர் நிறுத்தம் அமுலுக்கு வந்ததிலிருந்து குறைந்தது 600 பேர் கொல்லப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது.

உள்ளூர் அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்த மாத தொடக்கத்தில் காசா முழுவதும் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் குறைந்தது 32 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா மத்தியஸ்தம் செய்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், அண்மைய தாக்குதல்கள் வந்தன.



கனடா முரசு
திங்கட்கிழமை | 16/02/2026

## எட்மோன்டன் நகரில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி 4 பேர் காயம்




02



# ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்படும் வரை ஈரானுடன் எவ்விதமான உறவும் இல்லை

## கனடா அறிவிப்பு

ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை அந்த நாட்டுடன் எவ்விதமான இராஜ தந்திர உறவுகளையும் பேணப் போவ தில்லை என கனடா அறிவித்துள்ளது.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய கனடா வெளி விவகார அமைச்சர் அனிதா ஆனந்த், இது தொடர்பான கனடாவின் நிலைப் பாட்டை உத்தியோகபூர்வமாக வெளிப படுத்தியுள்ளார்.

ஈரானில் தற்போதைய ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படும் வரை அந்நாட்டுடன் தூதரக உறவுகளை மீள ஆரம்பிக்கும் எண்ணம் கனடாவிடம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

02

# கனடாவில் 3 சிறுவர்களுக்கு எதிராக திருட்டு உள்ளிட்ட 200 குற்றச்சாட்டுகள்

கனடாவின் மிஸிஸிசாகா நகரில் மூன்று மாத காலப்பகுதி யில் பல்வேறு வணிக வளாகங்க ளில் இடம்பெற்ற கடை உடைப்பு மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக மூன்று சிறு வர்களுக்கு எதிராக சுமார் 200 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

2025 நவம்பர் முதல் 2026 ஜன வரி வரை நகரம் முழுவதும் 35-க்கும் மேற்பட்ட கடைஉடைப்பு சம்பவங்கள் குறித்து

02






# எட்மோன்டன் நகரில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி 4 பேர் காயம்

கனடாவின் எட்மோன்டன் நகரின் மத்திய பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி நால்வர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

110 அவென்யூ மற்றும் 83 ஸ்ட்ரீட் சந்திப்பிற்கு அருகிலுள்ள மூன்று மாடிக் குடியிருப்பு கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைக்கப் பெற்றதாக தீயணைப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

காயமடைந்த நால்வரின் உடல் நிலை குறித்து விபரங்கள் இது வரையில் வெளியிடப்படவில்லை.

தீ விபத்து ஏற்பட்ட காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்து காரணமாக சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பிலும் தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.



## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

அனைத்து சம்பவங்களிலும் 2007 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வெள்ளி நிற ஆகுரா ஆர்டிஎக்ஸ் மற்றும் 2009 ஹையுண்டா எலாட்ரா உள்ளிட்ட பல்வேறு வாகனங்கள் பயன்படுத்தப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

“Project Toretto” எனப்படும் விரிவான விசாரணையின் ஒரு பகுதியாக, பெப்ரவரி 10ஆம் திகதி மிசிசாகாவில் உள்ள மூன்று வீடுகளிலும் ஒரு வாகனத்திலும் நான்கு தேடுதல் உத்தரவுகள் அமல்படுத்தப்பட்டன.

இதன் போது இரு சிறுவர்கள் கைது செய்யப்பட்டதுடன், 50,000 டொலருக்கு மேற்பட்ட மதிப்புள்ள திருடப்பட்ட பொருள்கள், ஜாக்கெட்டுகள், காலணிகள், வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருள்கள் மீட்கப்பட்டன.

மூன்றாவது சிறுவனை பொலிஸார் இதுவரையில் கைது செய்யவில்லை எனவும் பொலிஸார் தேடுதல் முன்னெடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

## ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், ஈரான் அரசாங்கத்துடன் தொடர்புடைய ஏழு நபர்களுக்கு எதிராக மேலதிக தடைகளை கனடா விதித்துள்ளது.

ஈரானில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைகள் குறித்து கனடா அதிக கவனம் செலுத்தி வருவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

கனடா ஏற்கனவே கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் ஈரானுடனான தனது இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துள்ளது. இதனிடையே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஆதரிக்கும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஈரான் மீது தாக்குதல் நடத்த ஜனாதிபதி உத்தரவிடும் பட்சத்தில், பல வாரங்கள் நீடிக்கக்கூடிய இராணுவ நடவடிக்கைகளுக்கு அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் தயாராகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் ஒரு கட்டமாக, இரண்டாவது விமானம் தாங்கி போர்க் கப்பல் ஒன்றும் அந்தப் பிராந்தியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அமெரிக்காவின் இத்தகைய இராணுவத் தாக்குதல்களுக்கு கனடா தனது ஆதரவை வழங்குமா என்பது குறித்து அமைச்சர் அனிதா ஆனந்த் நேரடியான பதில்கள் எதனையும் வழங்கவில்லை.



# 70 ஆவது காதலர் தினத்தை கொண்டாடிய கனடா தம்பதி

கனடாவில் வாழும் ஒரு தம்பதியர், தங்கள் 70ஆவது காதலர் தினத்தைக் கொண்டாடியுள்ளார்கள்.

கனடாவின் சஸ்காட்செவன் மாகாணத்திலுள்ள ரெஜைனா நகரில் வாழ்கிறார்கள் எர்வின் மில்லர் நேவா மில்லர் தம்பதியர்.

1955 ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள லேக்லாண்ட் கல்லூரியில் படிக்கும்போது, மாணவர்கள் படைசூழ பியானோ வாசித்துக்கொண்டிருக்கும் ஒரு இளைஞர், இளம்பெண்ணான நேவாவின் கண்ணில் பட்டுள்ளார்.

இருவரும் ஒருவரையொருவர் சந்திக்க, கண்டதும் காதல் வர, இருவரும் மனம் விட்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஓராண்டு ஆனதும் எர்வினுக்கு ஆசிரியர் வேலை கிடைத்துள்ளது. ஆனால், அப்போதுதான் நேவா செவிலியர் பயிற்சிக்காக படித்துக்கொண்டிருந்திருக்கிறார்.

பயிற்சி முடிக்கும்வரை அவரால் திருமணம் செய்துகொள்ளமுடியாது என கல்லூரி விதிகள் கூற, உங்களுக்காக என் படிப்பையே இழக்கத் தயார் என்று கூறியுள்ளார் நேவா.

திருமணமாகி கனடாவில் வந்து குடியமர்ந்த ஜோடிக்கு இரண்டு மகன்கள் பிறந்துள்ளார்கள்.

எங்கள் அன்பில் இன்றுவரை எந்த மாற்றமும் இல்லை என்று புன்னகையுடன் கூறும் எர்வினின் கன்கள் பாசத்துடன் நேவாவையே பார்த்துக்கொண்டிருக்கின்றன.

எப்படி 70 ஆண்டுகள் இந்த அன்பு நீடித்தது என்று கேட்டால், அதற்கு ஒரு ரகசியம் உள்ளது என்கிறார் எர்வின்.

ணவாழ்க்கையில் நல்லது நடந்தாலும் சரி, கெட்டது நடந்தாலும் சரி, எதைச் செய்தாலும் நாங்கள் இருவரும் இணைந்தே செய்தோம், அதிர்ஷ்டவசமாக எங்கள் வாழ்வில் கெட்டது அதிகம் நடக்கவில்லை என்கிறார் அவர்.

